# பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களும் சவால்களும் வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**டிலானி தே., அனுதர்ஷி, க**
ஊடகக் கற்கைகள் துறை,கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
niladilani277@gmail.com1, anutharsi@univ.jfn.ac.lk2

*பிராந்திய ஊடகவியலாளர்களுக்குரிய சந்தர்ப்பங்களும், சவால்களும் வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு என்ற இவ் ஆய்வானது சம காலத்தில் முக்கியமானதொரு ஆய்வாகக் காணப்படுகிறது. இந்த ஆய்விற்காக வவுனியா மாவட்டத்தில் முழு நேரமாகப் பணியாற்றுகின்ற பிராந்திய ஊடகவியலாளர்கள், பகுதி நேர ஊடகவிய லாளர்கள் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களுக்குரிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடு வது மட்டுமல்லாது அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் ஆய்வு செய்கின்றது. இவ் ஆய்விற்காக வவுனியா மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டும் நேரடியான கலந்துரையாடல் மூலமும் கிடைக்கப் பெற்ற பதில்களை வைத்தும் குழுமையக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தரவுகள், நேர்காணல்கள் போன்ற தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்கனவே முன்வைக்கப் பட்டிருந்த கருதுகோள்கள் என்பன குறித்த ஆய்வின் முடிவினை பிரதிபலிப்பதற்கு அமைவாக வேதனம் மற்றும் அச்சுறுத்தல்கள், மொழிப் பிரச்சினை, உளவியற் பிரச்சினை, இடப்பரப்பின் அகலம், குடும்பம் சார் எதிர்ப்பு போன்றவை அதிகம் இவ் ஊடகவிய லாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக அமைவதுடன் உலகமயமாக்கலின் விளைவால் தொழில்நுட்ப வசதிகள் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளதாகவும் ஏனைய காரணிகளும் துணைக் காரணிகளாக அமைகின்றது என்கின்ற முடிவானது பெறப்பட்டது.*

**திறவுச் சொற்கள்:** வவுனியா மாவட்டம், பிராந்திய ஊடகவியலாளர்கள், சந்தர்ப்பங்கள்,சவால்கள்.